**Date**: 24.03.2021

**DVA** 532/2019

ம.சா. 1 அகிலாண்டேஷ்வரி

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் எனது மனுவில் பத்தி 2 ல் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 16.09.2015 ம் தேதியில் கோவை மாவட்டம் குனியமுத்தூர் சுண்ணாம்பு கால்வாய் ஆயிஷா மகால் 2 என்ற திருமண மண்டபத்தில் இந்து சமய வழக்கப்படி திருமணம் நடைபெற்றது உள்ளது என்றால் ஆமாம் . எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் 16.09.2015 ம் தேதியன்று ஈரோடு காளமங்கலம் குலவிளக்கு அம்மன் திருக்கோவிலில் திருமணம் காலையில் நடைபெற்றது என குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம் . எனது மனுவில் 3 வது பத்தியில் 25 பவுன் நகையும் 7 ½ லட்சம் ரொக்கமும் 1 ம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான் . எனது மனுவில் பத்தி 10 ல் வரதட்சணையாக போடப்பட்ட 25 பவுன் நகையும், 5 லட்சம் ரூபாயும் வைத்து 1 ம் எதிர்மனுதாரர் சுகபோகமாக வாழ்ந்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தின் 3 ம் பத்தியில் என் கணவர் வீட்டினர் கவுண்டர் சமூக வழக்கப்படி திருமணத்திற்காக பெண் வீட்டினார் வரதட்சணை தொகை , வெள்ளி பொருட்கள், கட்டில், மெத்தை, குளிர் சாதனப்பெட்டி, ஏசி , வாசிங்மெஷின் மணமகனுக்கு மோதிரம், பிரேஸ்லெட், கோட் சுட், 10 விலையுயர்ந்த துணிகளைக் கொடுத்தனர் என்றும், அதே போல் என் பெற்றோரும் வரதட்சணையாக 50 சவரன் தங்க நகைகள் , ரூ. 7,50,000/- ரொக்கம் , 10 சவரனில் என் கணவருக்கு பிரேஸ்லெட் , மோதிரம் மற்ம் இதர வீட்டு உபயோகப்பொருட்கள் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தனர் என்றும் , அவ்வாறு கொடுக்க முடியாத பட்சத்தில் திருமணம் செய்ய முடியாது என்று கண்டிப்புடன் கூறிவிட்டனர் என்று சொல்லியுள்ள் விபரத்தினை நான் இம்மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் . நான் அவ்வாறு என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர் 3 ம் எதிர்மனுதாரருக்கு நரசிம்மபுரம் காமராஜர் வீதியில்

சொந்த வீடு உள்ளது என்றால் ஆமாம் . 3ம் எதிர்மனுதாரருடன் தான் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தான் மூத்த மகன் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் **Diplomo in EEE** படித்துள்ளார் என்றாலும், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் இறுதி தேர்வினை எழுதி முடிக்க இயலவில்லை என்றால் அவ்வாறு இல்லை . கல்லூரிக்குள் பிரச்சனை ஏற்பட்டதால் 1ம் எதிர்மனுதாரரை கல்லூரியில் இருந்து நிர்வாகம் நிறுத்தி விட்டது . ஆனால் உடல்நிலை சரியில்லை என்று பொய் சொல்கிறார்கள். மேற்கூறிய சங்கதியினை நான் என் மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றாலும் தெரியவில்லை. தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னரே 1ம் எதிர்மனுதாரரின் தம்பி முதலியார் இனத்தில் திருமணம் செய்து வெளிநாட்டில் செட்டிலாகிவிட்டார் என்றால் ஆமாம். அதனாலும் 1ம் எதிர்மனுதாரரின் சமூகத்தில் பெண் கிடைக்காததாலும், ஜாதக பொருத்தம் இல்லாததாலும் வேறு இனத்தில் பெண் தேடினார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இருப்பதால் யாரும் பெண் கொடுக்காததால் நாங்கள் கேரளாவில் இருந்து இங்கு வந்து செட்டிலானதால் ஆயிரம் பொய்யை சொல்லி என் வீட்டில் பெண் கேட்டார்கள் . மேற்கூறிய சங்கதிகளை நான் என் மனுவிலோ என் பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் ஞாபகமில்லை. தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கேரளாவில் இருந்து நாங்கள் எப்போது வந்தோம் என்றால் 1997ல் வந்தோம். திருமணத்திற்கு முன் எங்கள் இனத்தில் எனக்கு மாப்பிள்ளை கிடைக்கவில்லை என்றால் ஆமாம். என் தங்கை புவனேஸ்வரி என் திருமணத்திற்கு முன்பே காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். என் தங்கை தான் கனகராஜ் என்ற திருமணத் தரகர் மூலம் 2ம் மற்றும் 3 எதிர்மனுதாரர்களுக்கு அறிமுகமானார் என்றால் ஆமாம் . என் குடும்ப விபரங்களை எல்லாம் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களிடம் தங்கை புவனா தான் சொன்னார் என்றால் ஆமாம். எனக்கு திருமணமான போது வயது என்ன என்றால் 33. எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் 30 வயதிற்கு மேல் ஆனதால் ஜாதகம் பார்க்க வேண்டியதில்லை என்று என் தங்கை புவனா சொன்னதால் என்னை பெண் பார்க்க ஒப்புக்கொண்டு

எதிர்மனுதாரர்கள் வந்தார்கள் என்றால் 2ம் எதிர்மனுதாரர் தான் 30 வயதாகிவிட்டதால் ஜாதகம் தேவையில்லை என்று கூறினார் . 2ம் எதிர்மனுதாரர் என் ஜாதகத்தைகேட்டு வாங்கி அதற்கேற்றவாறு 1ம் எதிர்மனுதாரருக்கு உத்தரட்டாதி நட்சத்திரம் போட்டு பொய்யான ஜாதகத்தை தயாரித்து கொடுத்தார் . அவரது உண்மையான ஜாதகம் ரேவதி நட்சத்திரம். இந்த சங்கதிகளையும் நான் என் மனுவிலோ , பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றாலும , வழக்கிற்காக தற்போது தான் புதிதாக சொல்கிறேன் என்றாலும், பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.